

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் உதவி உபகரணங்கள் வேண்டி அளித்த மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார்.

# போதைப் பொருள் தடுப்பு பிரிவு உதவி ஆய்வாளரை தாக்கிய குற்றவாளி கைது

சென்னை பெருநகர காவல் துறையின் போதை பொருள் தடுப்பு பிரிவு (வடக்கு மண்டலம்) உதவி ஆய்வாளர் வெங்கடேசன் மற்றும் காவலர் மதன்குமார் ஆகிய இருவரும், சென்னை வண்ணாரப்பேட்டை மற்றும் புழல் காவல் நிலைய வழக்குகளில் தேடப்பட்டு வந்த குற்றவாளியான பூபாலன் என்பவரை தேடி வந்த நிலையில், அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி 18.07.2026 ஆம் தேதி 18.00 மணியளவில் ஆவடி மாநகர காவல் ஆணையரம் எல்லைக்குட்பட்ட பகுதியான மீஞ்சூர் அத்திப்பட்டின் ஒருவீட்டில்தங்கி இருந்த குற்றவாளி பூபாலன் என்பவரை கைது செய்ய முற்பட்டபோது மேற்படி வீட்டில் அவருடன் இருந்தசஞ்சய்(எ)ராகுல், பூனை(எ)ரேசர்கணேஷ், தர்ஷன் (எ) பைபர் தர்ஷன், வான்மொழி (எ) பானு, ஓசன்னா, ஆகியோர் சேர்ந்து உதவி ஆய்வாளர் மற்றும் காவலரை





கையால் அடித்து பூபாலன் கூறியதையடுத்து தர்ஷன் பட்டா கத்தியை எடுத்து உதவி ஆய்வாளர் தலையில் வெட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மீஞ்சூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளை கைது செய்ய ஆவடி காவல் ஆணையர் டி.ஆர். செந்தில்குமார் உத்தரவின் பேரில் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர். சிவகுமார், செங்குன்றம் துணை ஆணையர் கே. மகேஷ்வரி, செங்குன்றம் உதவி ஆணையாளர் பிராங் டி ரூபன் ஆகியோர் மேற்பார்வையில் மீஞ்சூர் காவல் ஆய்வாளர் (பொறுப்பு) ஆறுமுகம், செங்குன்றம் காவல் ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, சாத்தாங்காடு காவல் ஆய்வாளர் முகமது அமீர் மற்றும் உதவி ஆய்வாளர்ஆனந்த்தலைமையிலான தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தேடி வந்தனர்.

இந்நிலையில் மீஞ்சூர் இரயில்நிலையம்அருகே பைபர் தர்ஷன் மற்றும் ஓசன்னா ஆகியோர் நின்று கொண்டு இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து தனிப்படை போலீசார் மேற்படி குற்றவாளிகள் இருவரையும் பிடிக்க சென்ற போது குற்றவாளி தர்ஷன் கீழே விழுந்ததில் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

பிறகு இருவரையும் கைது செய்து, அவர்களிடம் இருந்து சுமார் 3.4 கிலோ கிராம் கஞ்சா கைபற்றப்பட்டு நீதி மன்ற காவலுக்கு அனுப்பபட்டனர். மேலும் தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்ய தேடப்பட்டுவருகின்றனர்.

### தேசபக்தி நாளிதழ் செய்தி எதிரொலி...

# குப்பைக் காடாக மாறிய ஸ்விம்மிங் பாத் லைன் ரயில்வே அண்டர்பாஸ் சுத்தம்

## அதிகாரிகளுக்கு சமூக ஆர்வலர்கள் நன்றி







கோலார் தங்கவயலில் உள்ள ஸ்விம்மிங் பாத் லைன் ரயில்வே அண்டர்பாஸ் பகுதியில் நீண்ட நாட்களாக குப்பைகள் குவிந்துதுர்நாற்றம் வீசியதால் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர். பள்ளி மாணவர்கள், கல்லூரிமாணவர்கள், தொழிலாளர்கள், பெண்கள், முதியவர்கள் என ஆயிரக்கணக்கானோர் தினமும் பயன்படுத்தும் இந்த முக்கிய பாதை சுகாதாரக் கேடாக மாறியிருந்தது.

இந்த பிரச்சினை குறித்து கென்னடி 4வது வார்டு முன்னாள் நகர சபை கவுன்சிலர் திரு. வேணி பாண்டியன் பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்ததுடன், நகராட்சி ஊழியர்கள் மூலம் அப்பகுதியை சுத்தம் செய்யும் பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளச் செய்தார். இருப்பினும், சிலர் மீண்டும் அதே இடத்தில் குப்பைகளைகொட்டியதால் பிரச்சினை மீண்டும் மீண்டும் உருவாகி வந்தது.

இந்த அவல நிலையை சுட்டிக்காட்டி சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து குரல் எழுப்பியதுடன், தேசபக்தி நாளிதழிலும் விரிவான செய்தி வெளியிடப்பட்டது. அந்த செய்தி எதிரொலியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக களமிறங்கி, அண்டர்பாஸ் பகுதியில் குவிந்திருந்த குப்பைகளை அகற்றி, முழுமையான தூய்மைப் பணிகளை துரிதமாக மேற்கொண்டனர்.

அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்ததற்கு சமூக ஆர்வலர்களும், அப்பகுதி பொதுமக்களும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர். மக்களின்குறைகளை கவனித்து உடனடி நடவடிக்கை எடுத்த சம்பந்தப்பட்ட துறையினரின் செயல்பாடு பாராட்டத்தக்கது என்றும் அவர்கள் கூறினர்.

அதே நேரத்தில், இந்த சுத்தம் ஒருமுறை மட்டுமே நடைபெறாமல், நிரந்தரமாக பராமரிக்கப்பட வேண்டும் என்றும், பொதுஇடங்களில் குப்பைகளை கொட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். அண்டர்பாஸ் பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், எச்சரிக்கை பலகைகள் அமைத்தல் மற்றும் தொடர்ச்சியான தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுதல் அவசியம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தூய்மையான நகரம் என்பது அதிகாரிகளின் பொறுப்பு மட்டுமல்ல; பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியம். பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பதும், பொதுஇடங்களில் குப்பைகளை கொட்டாமல் இருப்பதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

தேசபக்தி நாளிதழின் செய்தி எதிரொலியாக விரைந்து நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் நீண்டநாள் குறைக்கு தீர்வு காண முனைந்த அதிகாரிகளுக்கு சமூக ஆர்வலர்களும், அப்பகுதி மக்களும் நன்றியைத் தெரிவித்துள்ளனர்

### எஸ்.கே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதலாம் ஆண்டு துவக்க விழாவில்

# ஒழுக்கமும் இலக்கும் இருந்தால் வெற்றி நிச்சயம்

## மாணவர்களுக்கு ஊக்கமளித்த கல்வியாளர்கள்

திருவண்ணாமலை எஸ்.கே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 2026–2027 கல்வியாண்டிற்கான முதலாம் ஆண்டு மாணவர்களின்




துவக்க விழா கல்லூரி வளாகத்தில் உற்சாகமான சூழலில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு எஸ்.கே.பி. கல்விக் குழுமத்தின் தலைவர் கு. கருணாநிதி தலைமை வகித்தார்.

கல்விக் குழுமத்தின் இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி முன்னிலை வகித்தார். முதன்மை செயல் அலுவலர் முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் சிறப்புரை யாற்றினார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் எம். முருகன் வரவேற்புரையாற்றி, புதிதாக கல்லூரியில் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் அன்புடன் வரவேற்றார்.

தலைமை உரையாற்றிய எஸ்.கே.பி. கல்விக் குழுமத்தின் தலைவர் கு. கருணாநிதி, இன்றைய காலகட்டத்தில் பெற்றோர்களின் பொறுப்பும், குழந்தை வளர்ப்பில் மதிப்புகளின் அவசியமும் குறித்து எடுத்துரைத்தார். மேலும், மாணவர்கள் கல்வியுடன் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை மற்றும் உயரிய பண்புகளை கடைப்பிடித்தால் தான் வாழ்க்கையில் நிலையான வெற்றியை அடைய முடியும் என வலியுறுத்தினார். தொடர்ந்து சிறப்புரையாற்றிய முதன்மை செயல் அலுவலர் முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி வேகமாக முன்னேறும் இன்றைய உலகிலும் கலை மற்றும் அறிவியல் கல்விக்கான முக்கியத்துவம் குறையவில்லை என்பதை சுட்டிக்காட்டினார். மாணவர்கள் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டு, தெளிவான இலக்குகளை நிர்ணயித்து விடா முயற்சியுடன் செயல்பட்டால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்று அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் மக்கள் தொடர்பு அலுவலர் சையத் ஜஹிருத்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக கணிதவியல் துறைத் தலைவர் முனைவர் தே. இ. அசுந்தாராணி நன்றியுரை வழங்கினார். இதனுடன் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான துவக்க விழா இனிதே நிறைவுற்றது.

### செங்குன்றம் சுற்றுவட்டாரத்தில்

# மின்தடையால் பொதுமக்கள், வியாபாரிகள் பாதிப்பு

மாதவரம் தொகுதி செங்குன்றம் சுற்று வட்டார பகுதிகளான செங்குன்றம், பாடியநல்லூர், நல்லூர், அலமாதி, கும்மனூர், பெருங்காவூர், ஆங்காடு, சோழவரம், காரனோடை, தீர்த்தக்கிரியம்பட்டு, விளாங்காடுபாக்கம், கிராண்ட்லைன், புள்ளிலைன், வடகரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஜூலை மாதத்தில் மட்டும் மின்தடை பராமரிப்பு பணி என்ற பெயரில் 3க்கும் மேற்பட்ட முறை மின்தடை ஏற்படுத்தப்பட்டதையடுத்து பொதுமக்கள், வியாபாரிகள், வியாபார நிறுவனங்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டுகின்றனர். இப்பகுதிகளில் பல்வேறு கார்ப்பரேட் மற்றும் ஸ்டார்ட்அப், குடிசைத் தொழில் நிறுவன ங்கள் அதிகளவில் உள்ளன.



புழல், சோத்துப்பெரும்பேடு, அலமாதி உள்ளிட்ட துணை மின்நிலையங்களிலிருந்து ஜூலை 7, 17 மற்றும் 21 ஆகிய தேதிகளில் மின்பராமரிப்பு பணிக்காக காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்படுத்தப்பட்ட மின்தடையினால் அன்றாட வியாபாரங்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டதோடு, பொது மக்களின் அன்றாட தேவைகளான குடிநீர் உள்ளிட்டவைகள் பாதிக்கப்பட்டதோடு மனஉளைச்சலுக்கு உள்ளானதாக குற்றம் சாட்டுகின்றனர்.

மின் பராமரிப்பு பணிகள் என்பது தேவையான ஒன்றாக இருந்தாலும், ஒரே மாதத்தில் 3 முதல் 4 தடவை மின்தடை ஏற்படுத்துவதால் உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி பாதிக்கப்படுவேதோடு பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிப்பதாக சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் குற்றம்சாட்டுகி ன்றனர்.

எனவே வருங்காலங்களில் மின்சாரத்துறை உயர் அதிகாரிகள் இதை கவனத்தில் கொண்டு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கொரு முறையோ மின்பராமரிப்பு பணியை மேற்கொள்ள வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.



திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செம்மாம்பாடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகையில் உள்ள புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.